23.03.2021
C.M.P No. 1413/2020

சாட்சி 1.

ஜபார் சாதிக், வயது 49, த/பெ அப்துல் வகாப், 17/121, பள்ளித்தெரு, திருவிதாங்கோடு அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வருபவரின் பிரமாண வாக்குமூலம்

..........

நான் திருவிதாங்கோட்டில் மளிகை கடை வைத்துள்ளேன். 26.02.2020 அன்று திருவிதாங்கோடு அஞ்சுவண்ணம் பள்ளி வளாகத்தில் அனுமதிக்கப்படாத இடத்தில் நூர்தின் என்பவர் நோட்டீஸ் கொடுத்தார். 27.02.2020 அன்று வீடு வீடாக எங்கள் பள்ளியை சார்ந்தவர்களிடம் நோட்டீஸ் கொடுத்தார். நோட்டீசில் அன்றை பள்ளியின் செயலாளர் அப்துல் ஜாபர் வாசக சாலையின் இடத்தை அபகரித்துவிட்டதாக அவதூறாக தகவல்கள் அச்சிடப்பட்டிருந்தது. அப்துல் ஜாபர் அவர்கள் மேல் உள்ள காழ்புணர்ச்சியின் காரணமாக நூர்தின் இவ்வாறு செய்தார்.

சாட்சியின் கையெழுத்து:

23.03.2021
C.M.P No. 1413/2020

சாட்சி 2.

ஆசிக் ரகுமான், வயது 41, த/பெ அப்துல் அசீஸ், அமராவதி ரோடு, திருவிதாங்கோடு அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வருபவரின் பிரமாண வாக்குமூலம்

..........

26.02.2020 அன்று வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்த உடன் நூருதின் என்பவர் நோட்டீஸ் கொடுத்தார். பின்பு 27.02.2020 அன்று ஜமாத்தை சேர்ந்த அந்த தெருவில் உள்ள வீடுகளில் நோட்டீஸ் கொடுத்தார். வாசக சாலை சம்பந்தமாக பிட் நோட்டீஸ் கொடுத்திருந்தார். அப்துல் ஜாபர் சன்மார்க்க வாசக சாலையை அபகரித்தது போல் அந்த நோட்டீசில் எழுதப்பட்டிருந்தது.

சாட்சியின் கையெழுத்து.